4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.**M.**நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண்.**493/2021** நாள்: **07.02.2026** வா.சா.1 – ஜெகஜோதி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

பிரதிவாதி மீது ரூ.9 லட்சத்திற்கு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காசோலை வழக்கு எண் STC No.701/2019. மேற்படி காசோலை வழக்கில் உள்ள காசோலை தொகையை வட்டியுடன் வேண்டுமென்று இந்த அசல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி காசோலை வரவு செலவு தவிர வேறு வரவு செலவு எனக்கு கிடையாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்கும் சேர்த்து தான் STC No.701/2019 வழக்கில் பிரதிவாதியுடன் சமரசம் ஆனானே என்றால் சாட்சி சரிதான், ஆனால் அதில் அசல் தொகைக்காக சமரசம் ஆனேன், இந்த வழக்கில் அசல் தொகைக்கு வட்டியும், செலவு தொகையும் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் அசலுக்கு வட்டி இவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்றும், செலவுத்தொகை இவ்வளவு செலுத்த வேண்டும் என்று வழக்குரையை திருத்தம் செய்து பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 39வது பத்தியில் அசல் தொகையும், வட்டியும் பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சாட்சி அசல் தொகையை கேட்கவில்லை, அதற்கான வட்டியை மட்டும் கேட்டுள்ளதாக கூறுகிறார். இந்த வழக்கையும், காசோலை வழக்கையும் சேர்த்து சமரசம் செய்வதற்கு தரப்பினராக எங்கள் இருவரையும் மக்கள் நீதிமன்ற நடுவர் கேட்ட பிறகு, மேற்படி வழக்குகளில் சமரசத்திற்கு நாங்கள் சம்மதித்த பிறகு நடுவர் கையொப்பம் போட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள என் போட்டோவில் உள்ள கையொப்பம் மற்றும் விரல்

பதிவு ரேகை என்னுடையவை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள பிரதிவாதி போட்டோவிற்கு அருகில் உள்ள கையொப்பம், கைரேகை பிரதிவாதி கையொப்பம், கைரேகை என்றால் சரிதான். காசோலை வழக்கில் எனது வழக்கறிஞர் திரு.சிவகுரு. இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது எனது வழக்கறிஞர் திரு.சிவகுரு. வா.சா.ஆ.15 ஆவணத்தில் எனது வழக்கறிஞர் என்ற முறையில் மேற்படி திரு.சிவகுரு கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் வழக்கறிஞர் திரு.சிக்கந்தர் பாட்சா என்பவர் பிரதிவாதிக்காக மேற்படி ஆவணத்தில் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 17.11.2022 ல் நீதித்துறை நடுவர் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். 12.11.2022 அன்று நீதித்துறை நடுவரும், மேற்படி மன்றத்தில் உள்ள உறுப்பினர்களும் கையொப்பம் போடவில்லை, 17.11.2022 அன்று தான் கையொப்பம் போட்டார். வா.சா.ஆ.15 ஆவணத்தை பிரதிவாதி தான் தயார் செய்தார். மேற்படி வா.சா.ஆ.15 ஆவணத்தை படித்து பார்த்து தான் நானும், எனது வழக்கறிஞரும் கையொப்பம் போட்டோம். வா.சா.ஆ.15 ஆவணத்தில் அசல் தொகைக்கு வட்டி தொகை மற்றும் செலவு தொகை பிரதிவாதி எனக்கு செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு வாசகம் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். 16.11.2022 அன்று வா.சா.ஆ.9 ஆன ரசீதை உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 ல் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரை வில்லையின் மேல் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். 12.11.2022 ல் எதற்காக நான் காசோலை வழக்கை நான் வாபஸ் வாங்கவில்லை என்றால் எனக்கு பாக்கி தொகை ரூ.75,000 வரவேண்டியிருந்ததால் நான் காசோலை வழக்கை வாபஸ் வாங்கவில்லை. வா.சா.ஆ.9 ஆன ரசீது ஆவணத்தில் எனக்கு பிரதிவாதி என்னிடம் இருந்து பெற்ற ரூ.9 லட்சத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக, நான் ரசீது வழங்கியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் எனக்கு ரூ.75,000 பிரதிவாதி

தரவேண்டும், மேற்படி பாக்கி தொகையை தராமலேயே நான் ரசீது வழங்கினேன். வா.சா.ஆ.9 ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.9 ரசீது ஆவணத்தில் பாக்கி ரூ.75,000 பிரதிவாதி தரவேண்டியுள்ளது என்ற வாசகத்தை எழுத வேண்டும் என்று நான் சொன்னேனா என்றால் சாட்சி மேற்படி ரூ.75,000 த்தை தருவதாக சொன்னார்கள், ஆனால் தரவில்லை, அதற்கு முன்பே கையொப்பம் வாங்கிவிட்டார்கள். எனது வழக்கறிஞரிடமும் ரசீதை படித்து காண்பித்து சம்மதம் தெரிவித்த பிறகு தான் நான் ரசீதை வழங்கினேன். நான் வா.சா.ஆ.9 ரசீதில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ.9 லட்சத்தை பிரதிவாதியிடமிருந்த பெற்றுகொண்டேன் என்றும், நான் சொல்வது போல் பிரதிவாதி ரூ.75,000 பாக்கி எதுவும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.9 லட்சத்தை பெற்று கொண்டதாக ரசீதை தாக்கல் செய்ததால் உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1, மக்கள் நீதிமன்ற உறுப்பினர்களும், 17.11.2022 அன்று வா.சா.ஆ.15 உத்தரவை பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆன உறுதிமொழி ஆவணம் 22.11.2022 அன்று ஏற்படுத்தப்பட்டது. மேற்படி உறுதிமொழி ஆவணத்தை பிரதிவாதி மற்றும் அவரது வழக்கறிஞர் தான் தயார் செய்து வந்தார்கள். நான் மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்த்தேன், எனது வழக்கறிஞர் அதை படித்து பார்க்கவில்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள 1வது லக்கமிட்டவர் கையொப்பம் என்னுடைய கையொப்பம், 2வது லக்கமிட்டவர் கையொப்பம் பிரதிவாதி கையொப்பம். மேற்படி வா.சா.ஆ.13 ஆவணத்தில் பிரதிவாதி தொகையை செலுத்திவிட்டதால் நான் கடனுக்கு ஆதரவாக பிரதிவாதி எழுதி கொடுத்த ஆவணத்தை திருப்பி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி ஆவணத்தில் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே எவ்வித ஒரு தொகை பாக்கியோ, வட்டி பாக்கியோ வரவேண்டியது இல்லை என்று நான் உறுதியளித்ததாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.13 ஆவணத்தை இரண்டு ஆவணங்களாக தயாரித்து ஒரு பிரதியை நானும், மற்றொரு பிரதியை பிரதிவாதியும்

வைத்துகொண்டோம் என்றால் சரிதான். பிரதிவாதி கடனுக்கு ஆதரவாக கொடுத்த ஆவணங்களை திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்படி காசோலை வழக்கையும், இந்த வழக்கையும் சேர்த்து தான் நானும், பிரதிவாதியும் சமரசம் ஏற்படுத்தி கொண்டு அசல் தொகையை பெற்றேன் என்றும், அதனால் சமரசத்தையும் ஏற்படுத்தி கொண்டேன் என்றும், தற்போது பிரதிவாதி அரசு பணியில் இருப்பதால் அவரிடம் துருலாபம் அடைய வேண்டும் என்று கூடுதல் தொகை கேட்டு இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி அல்லாமல் வேறு நபர்களுடன் வட்டி வரவு செலவு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 ல் யோவான் என்பவருக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் கதிர்வேல் என்பவர் என்னிடம் கடன் வாங்கியாதாகவும், காசோலை வழங்கியதாக STC No.921/2022 என்ற வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கதிர்வேல் மீது போடப்பட்ட வழக்கை தொகை வசூலானதால் நான் சமரசம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சமரச தொகையாக நான் பெற்றுக்கொண்டது ரூ.25 லட்சம் என்றால் சரிதான். உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 ல் பொன் அருண்சங்கர் என்பவர் மீது CC No.94/2014 என்ற நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 ல் சிவக்குமார் என்பவர் மீது CC No.366/2013 என்ற காசோலை வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் நான் வரவு செலவு மூலமாக செய்த வரவிற்காக நான் மேற்படி காசோலை வழக்குகளை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் சகோதரர் மணிகண்டனுக்கும் எனக்கும் வரவு செலவு கிடையாது. பிரதிவாதியின் சகோதரர் மணிகண்டன் என்னிடம் ரூ.1,25,000 கடன் வாங்கியிருந்தார் என்றும், மேற்படி தொகையை திரும்ப செலுத்திய பிறகு மீத ரூ.75,000 செலுத்தினால் தான் பிரதிவாதியின் வழக்கையும் சேர்த்து சமரசம் முடிப்பேன் என்று நான்

சொன்னேன் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.75,000 த்தை மணிகண்டன் செலுத்தியதை பிரதிவாதி செலுத்தியதாக வா.சா.ஆ.10, 11, 12, 16 ஆகிய ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் அதற்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய வற்புறுத்தலின் காரணமாக பிரதிவாதி அவருடைய தம்பிக்காகவும் மேற்படி தொகையை எனக்கு செலுத்தினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணத்திற்கு சாட்சிய சட்டம் பிரிவு 65 b சான்றிதழ் எதுவும் நான் வழங்கவில்லை என்றால் சரியல்ல. காசோலை வழக்கையும் இந்த வழக்கையும் சேர்த்து தான் சமரசமாக முடிக்கப்பட்டது என்றும், அசல், வட்டி, செலவுதொகை ஆகியவை சேர்த்து தான் ரூ.9 லட்சம் என்று முடிக்கப்பட்ட பிறகு நான் காசோலை வழக்கை மட்டும் நான் வாபஸ் வாங்கிவிட்டு சமரசத்திற்கு விரோதமாக நான் இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு நான் இழப்பீடு தொகை செலுத்த கடமைபட்டவன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் பிரதிவாதி ஒரு தரப்பினரல்ல என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான், யோவான் மீது தாக்கல் செய்துள்ள வழக்கில் 20.12.2022 அன்று தாக்கல் செய்தேன். இந்த வழக்கிற்கும் மேற்படி வா.சா.ஆ.14 ஆவணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணத்தில் எனக்கு யார் வங்கியில் பணம் செலுத்தினார் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், நான் தவறாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை வழக்கிலே இந்த வழக்கையும் சேர்த்து சமரசம் ஆகிவிட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், பிரதிவாதிக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலுக்கு நான் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. பிரதிவாதி வட்டியோ, செலவு தொகையோ செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பார் கவுன்சில், உச்ச நீதிமன்றம் மற்றும்

உயர் நீதிமன்றத்திற்கு மனு அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிக்கு முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர் மீதும், பிரதிவாதி காசோலை வழக்கில் முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர் மீதும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள Reply Statement, முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பொய் புகார் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் மீது பார் கவுன்சில், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு புகார் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எதிராக முன்னிலையாகும் வழக்கறிஞர் மீது பொய் புகார் கொடுக்கும் பழக்கமுடையவன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.07 14:44:25 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.